பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 10 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – மலாவி இடையே கலை, கலாச்சாரம், விளையாட்டு, உள்ளிட்ட நான்கு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

2. புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் நாட்டின் அனைத்து மொழிகளையும் பாதுகாக்க அரசு முயற்சி மேற்கொண்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. இந்திய இளைஞர்கள் கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகம், புதுச்சேரியில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 231 ரன் எடுத்துள்ளது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<>>>>**

ஆப்பிரிக்க நாடுகள் பயணத்தின் நிறைவாக மலாவி சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அந்நாட்டு அதிபர் திரு **Lazarus Chakwera** –வை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

அல்ஜீரியா, மவுரிட்டோனியா நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று குடியரசுத் தலைவர், மலாவி சென்றடைந்தார்.

இந்தியா – மலாவி பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தையிலும் குடியரசுத் தலைவர் பங்கேற்றார்.

கலை மற்றும் கலாச்சாரம், விளையாட்டு, இளைஞர் நலன் மற்றும் மருந்து துறைகளில் மலாவி-யுடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளது.

பின்னர், மலாவிக்கு இந்தியா சார்பில் ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி வழங்கப்படும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அறிவித்தார்.

முன்னதாக, அங்குள்ள போர் நினைவுச்சின்னத்திற்கு சென்று குடியரசுத் தலைவர் மரியாதை செலுத்தினார்.

**<<<<<<>>>>**

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமநீதி மற்றும் சமத்துவத்தை வழங்குவதே மனித உரிமையின் அடிப்படையாகும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிறுவன நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், இந்தியாவின் தார்மீக கட்டமைப்பில் மனித உரிமைகள் எப்போதும் உள்ளதாக கூறினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரையே மனித உரிமைகளின் அடிப்படையிலானது என்று அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு வடிவத்திலும் பாகுபாடு காட்டுவது மனித உரிமைகளுக்கு சவாலானது என்று திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>**

புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் நாட்டின் அனைத்து மொழிகளையும் பாதுகாக்க அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, செம்மொழிகளாக அண்மையில் அறிவிக்கப்பட்ட பாலி, மராத்தி உள்ளிட்ட ஐந்து மொழிகளின் அறிஞர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், நாட்டின் அனைத்து மொழிகளும், இந்திய மொழிகள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து கூறிவருவதாக தெரிவித்தார்.

புதிய கல்விக்கொள்கையின் உணர்வுக்கு ஏற்ப, இந்திய மொழிகளில் கற்றலை ஊக்குவிக்கவும், நாட்டின் மொழியியல் பாரம்பரியத்தை கௌரவிக்கவும், பாதுகாக்கவும் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

தாய்மொழியில் கல்வி பயிலும் வசதி, அனைத்து இந்திய மொழிகளுக்கும் சமமான முக்கியத்துவம் அளித்து பன்மொழி புலமையை உயர்த்துவதில் அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<>>>>

இந்திய இளைஞர்கள் கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்து வருவதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இளைஞர்களின் திறமை மற்றும் ஆற்றல் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மனதின் குரல் வினாடி – வினா போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் வழங்கி பாராட்டினார்.

முன்னாள் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு முரளிதரன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>

பப்புவா நியூ கினியாவுக்கு இந்தியா சார்பில் முதல் கட்டமாக 12 ஹீமோ டயாலிசிஸ் இயந்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்களை ஏற்றிச்சென்ற கப்பல் அந்நாட்டு துறைமுகத்தை சென்றடைந்திருப்பதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், இந்தியா அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேபோல், லெபனான் நாட்டிற்கு மனிதாபிமான உதவியாக 33 டன் மருந்துப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட உள்ளதாகவும், முதல் கட்டமாக 11 டன் மருந்துப்பொருட்கள் இன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

ஹரியானா முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி மற்றும் அமைச்சர்கள் இன்று தங்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர்.

அமைச்சர்களுக்கான இலாக்காக்கள் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், ஹரியானா மக்களுக்காக தாம் அயராது பாடுபடுவேன் என்றும் திரு நயாப் சிங் சைனி கூறினார்.

<<<<<<>>>>

தில்லி முன்னாள் அமைச்சரும், ஆம் ஆத்மி மூத்த தலைவருமான திரு சத்யேந்திர ஜெயினுக்கு சிறப்பு நீதிமன்றம் இன்று ஜாமின் வழங்கியுள்ளது.

நிதி முறைகேடு தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையால் கடந்த 2022-ஆம் ஆண்டு மே 30-ஆம் தேதி திரு சத்யேந்திர ஜெயின் கைது செய்யப்பட்டார்.

தற்போது நீதிமன்ற காவலில் உள்ள அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்குபின் ஜாமின் வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீடு விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜார்கண்ட் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி 68 இடங்களில் போட்டியிடும் என்று அம்மாநில பிஜேபி தேர்தல் இணை பொறுப்பாளர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா தெரிவித்துள்ளார்.

அனைத்து ஜார்கண்ட் மாணவர் சங்கத்திற்கு, பத்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய ஜனதாதளம் கட்சிக்கு இரண்டு தொகுதிகளும், சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சிக்கு ஒரு தொகுதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கிடையே, ஜார்கண்ட் மாநிலத்தில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, தொகுதி பங்கீடு குறித்து தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதாதளம், இந்திய கம்யூனிஸ்ட் - எம் எல் கட்சிகள் இணைந்து போட்டியிடுகின்றன.

<<<<<<>>>>

உத்தராகண்டில் குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை அமலாக்குவது தொடர்பாக திரு சத்ருகன் சிங் தலைமையில் அமைக்கப்பட்டக்குழு தனது வரைவு அறிக்கையை முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி-யிடம் இன்று வழங்கியுள்ளது.

இந்த சட்டத்தை மாநிலத்தில் விரைவில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த முடிவு விரைவில் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு 3 சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டதைபோல, 50 சதவீதமாக இருந்த அகவிலைப்படி, தற்போது 53 சதவீதமாக உயர்த்தப்படுவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த அகவிலைப்படி உயர்வு, முன்தேதியிட்டு ஜூலை மாதம் முதல் வழங்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, 16 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதார்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதார்கள் பயனடைவார்கள் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

உலகின் மிகப்பெரிய மருத்துவக்காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக இதன்மூலம் பயனடைந்தவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், செயல்படும் புற்றுநோய் சிகிச்சை பிரிவில், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் ஏராளமான பெண்கள் பயனடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*வாய்ஸ் படை - லஷ்மணன் - 37 செகண்ட்ஸ்*

<<<<<<>>>>

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

மேற்குவங்கத்தின் கங்கைக்கரை பகுதிகள் மற்றும் ஒடிஷா மாநிலத்தில் வரும் 23 மற்றும் 24-ஆம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

என்றாலும், வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு மற்றும் மத்திய மாநிலங்களில் மழைக்கான வாய்ப்பில்லை என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, வங்கக்கடலில் வரும் செவ்வாய்க்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாகவும், இது வியாழக்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 231 ரன் எடுத்துள்ளது.

பெங்களூருவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், நியூசிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரை விட இந்தியா 125 ரன் பின்தங்கியுள்ளது.
நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 402 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.
**Rachin Ravindra** 134 ரன் குவித்தார்.

---------------

கனடாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 12-10, 2-11, 11-6, 11-5 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **Tom Wals** –ஐ வென்றார்.

---------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் ஆசிய மகளிர் **Netball** சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை வென்றது.

---------------

சிட்னி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anupama Upathyaya, Tanya Hemanth, Tasnim Mir, Alap Mishra** ஆகியோர் ஒற்றையர் பிரிவிலும், ஹரிஹரன் - ரூபன் குமார் இணை மற்றும் **Arathi Sara Sunil – Varshini Viswanath Sri** இணை இரட்டையர் பிரிவிலும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<<<END>>>>**